2008 ஏப்ரல் 17] [பேரவைத் தலைவர்]

நீக்கப்படுகின்றன (குறுக்கீடு) சரி உட்காருங்கள், உட்காருங்கள். திரு போஜனர் வரதன், உட்காருங்கள்.

8. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 25–4–2008, வெள்ளிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 20, உயர் கல்வித் துறை, 6–5–2008, செவ்வாய்க்கிழமை அன்றும், 6–5–2008 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 32, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை எண் 17, இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) ஆகியவை 25–4–2008 வெள்ளிக்கிழமை அன்றும் பேரவையின் ஒப்புதலோடு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் – 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கோடித் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கும் எங்கள் தலைவர் முத்தமிழறிஞரே! நீங்கள் அகந்தை இல்லா அகநானூறு; குறைவில்லா குறுந்தொகை; நற்றமிழ் பேசும் நற்றிணை; எல்லோரிடமும் பாசம் காட்டும் பதிற்றுப் பத்து; வறியவருக்கு வாரி வழங்கும் பரிபாடல்; கற்றறிந்தோர் ஞானம் கலித்தொகை; மொத்தத்தில் நீங்கள்தான் எங்கள் சங்கத் தமிழ்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் வளர்ச்சிக்கென உழைக்கும் சாதனைத் தமிழ்; பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பேனா பிடித்து, காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணாவின் கருத்தை விதைத்து, மகாத்மா காந்தியின் வழியில் சமாதானம் பேசி, பண்டித ஜவஹர்லால் நேருவைப்போல்